1978 மார்ச் 3]

தஞ்சாவூர்-பட்டுக்கோட்டை சாலையில் மேம்பாலம்

* 377 வினா— திரு டி. எம். தைலப்பன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர்-பட்டுக்கோட்டை சாலையில் தஞ்சாவூர் நகராட்சி எல்லைக்கருகில் உள்ள இரயில் பாதைகளைக் கடக்க மேம்பாலம் அமைக்கும் உத்தேசம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : இல்லை.

[முற்பகல் 10—00]

திரு டி. எம். தைலப்பன் : தஞ்சாவூர்-பட்டுக்கோட்டை பஸ் ரூட்டில் தஞ்சை-கும்பகோணம் இரயில் பாதையும் தஞ்சை-நாகப்பட்டினம் இரயில் பாதையும் இருக்கிறது. அதைக் கடந்து செல்ல ஆயிரக்கணக்கான பஸ்களும், லாரிகளும், மாட்டு வண்டிகளும் வெகுநேரம் காத்திருந்து செல்ல வேண்டியிருக்கிறது. இதைக் கவனத்தில் கொண்டு மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்புகொண்டு அந்த மேம்பாலத்தை உடனடியாக அமைத்துத் தர நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த மேம்பாலத்தை அமைப்பதற்கு சுமார் 35 லட்சம் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. மத்திய அரசு இதில் 50 சதவீதம் செலவை ஏற்க வேண்டியுள்ளது. இதுபற்றி தீர ஆராய்ந்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை சற்று நீட்டிக்கிறேன்.

உளுந்தூர்பேட்டை அருகே மேம்பாலம்.

*378 வினா—திரு துரை முத்துசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை-கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் வரும் உளுந்தூர்பேட்டை ரயில்வே பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என்றால் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) மற்றும் (ஆ) நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தேசிய நெடுஞ்சாலை எண். 45-ல் கி.மீ. 194-2-ல் மேம்பாலம் கட்டும் பணிக்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கவில்லை. மீண்டும் கோரிக்கையை வலியுறுத்திய பின்னர் இப்பணியை வரும் திட்டத்தில் சேர்ப்பது பற்றி கவனிக்கப்படுமென மத்திய அரசு தெரிவித்துள்ளது.

திரு. துரை முத்துசாமி: எத்தனை லட்சம் செலவில் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு எப்போது அனுப்பப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இந்த மேம்பாலம் கட்டுவதற்கு மாநில அரசு 50 சதவீதம் செலவினத்தையும் மத்திய அரசு 50 சதவீதம் செலவினத்தையும் ஏற்கவேண்டியுள்ளது. மத்திய அரசு 50 சதவீதம் செலவினை ஏற்கவேண்டுமென மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டது. மத்திய அரசு நடப்பாண்டில் அதை ஏற்றுக்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படுமென்று 1977-ல் தெரிவித்துள்ளது. அதன் அடிப்படையில் விரைவில் இதை ஏற்று நடைமுறைப் படுத்த செயல்கள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன்: தலைவரவர்களே, இந்த நெடுஞ்சாலைகளில் பெரிய மேம்பாலத்தை அமைப்பதற்கு 50 சதவீதம் மத்திய அரசும் 50 சதவீதம் மாநில அரசும் ஏற்க இருக்கின்ற காரணத்தால் அப்படிப்பட்ட மேம்பாலங்கள் கட்டுவது தடைப்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். 5, 6 தாலுக்காக்களை தஞ்சையுடன் அது இணைக்கின்றது. அதைக் கடந்து செல்வதற்கு 5 தாலுக்காவிலிருந்து வரும் கல்லூரிக்கு செல்கின்றவர்களும், பள்ளிக்குப் போகின்றவர்களும் அந்த ரயில் பாதை மூடி இருப்பதால் ஒருமணி நேரத்திற்கு மேல் தாமதித்துச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே இதனை கவனத்தில் கொண்டு விரைவில் அந்த மேம்பாலத்தை அமைப்பதற்குத் திட்டம் தீட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தமிழகத்தின் பல பகுதிகளிலும் இருக்கின்ற ரயில் பாதைகளின் குறுக்கே மேம்பாலங்கள் கட்டுவதன் தேவையை மாநில அரசு உணர்ந்திருக்கின்ற காரணத்தால் உடனடியாக அவைகளைக் கட்டுவதற்கு காரியங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது. நிதிநிலை காரணமாக மத்திய அரசு தாமதம் செய்து வருவதாகத் தெரிகிறது. மாநில அரசு தொடர்ந்து மத்திய அரசை வற்புறுத்தி அந்த மேம்பாலங்களைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 மார்ச் 3]

திரு. எம். ஆறுமுகம் : 1978–79 இரயில்வே பட்ஜெட்டில் கூறும்போது, இரயில்வே பாதைகளில் மேம்பாலங்கள் கட்டும் போது அதன் செலவை முழுக்க முழுக்க மத்திய அரசே ஏற்கும் என்று குறிப்பிடப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படியானல் அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இனிமேல் மேம்பாலம் கட்டுவதற்கு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அண்மையில் கூட மத்திய அரசிடமிருந்து வந்த தாக்கீதில் 50 சதவீதம் செலவினத்தைத் தான் புதிய மேம்பாலங்கள் அமைக்கும் போது மத்திய அரசு எடுத்துக் கொள்வதாகவும், ஏற்கனவே இருக்கிற மேம்பாலங்களை சீரமைப்பதற்கு உண்டான செலவைக்கூட மத்திய அரசு ஏற்க இயலாது என்றும் தெரிவித்துள்ளது. நிதிநிலையின் காரணமாக மத்திய அரசு தயக்கம் காட்டுகிற காரணத்தால் அந்த 50 சதவீத செலவையாவது மத்திய அரசு கண்டிப்பாகத் தரவேண்டுமென்று நாங்கள் வற்புறுத்துவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மன்னார்குடி வட்டத்தில் குறுவை சாகுபடி.

*379 வினு—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:—

தஞ்சை மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா திருமேனி ஏரி 16–10–1977 அன்று உடைப்பெடுத்ததால் மகராஜபுரம், பாளையக்கோட்டை, திருமக்கோட்டை, வள்ளூர், எளவனூர், போன்ற பகுதிகளில் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டது உண்மையா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : திருமேனி ஏரியின் உள்வாயில் ஆக்கிரமிப்பு செய்து சாகுபடி செய்பவர்களில் சிலரால் கடந்த 16–10–77 அன்று நடுநிசியில் ஏரியில் ஓர் உடைப்பு வெட்டிவிடப் பட்டது. அதனுல் ஏற்பட்ட நீர்ப்பெருக்கு அருகே உள்ள திருமேனி ஆற்றில் கலந்துவிட்டது. பொதுப்பணித்துறையினரால் இந்த உடைப்பு அடைக்கப்பட்டது. ஏரியின் உடைப்பினுல் பயிர்களுக்கு சேதம் ஏதும் ஏற்படவில்லை. தண்ணீர் முழுவதும் இரண்டு நாட்களில் வடிந்து விட்டது. சுமார் 100 ஏக்கர் பரப்பில் குறுவை மற்றும் சம்பா, ஐ. ஆர். 20 நெற்பயிர் இதனுல் லேசாக பாதிக்கப்பட்டது.